# கோட்டக்குப்பம் நகராட்சி

## மேசைப்பொருள்

**2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ம் தேதி புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு கோட்டக்குப்பம் நகராட்சியில் மேசைபொருள் கூட்டம் நகர்மன்ற தலைவர்அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.**

**தலைமை.திரு.ச.ஜெயமூர்த்தி, நகர்மன்றதலைவர்,**

**பொருள் எண்: 01**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வரையுள்ள வார்டுகளில் 17.07.2025 முதல் 03.09.2025 வரை 11 கட்டமாக நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் வரப்பெற்ற மனுக்களில் அடிப்படை வசதிகள் செய்து தர கோரி கீழ்க்காணும் பணிகளை இந்நகராட்சியின் வருவாய் நிதி நிலைக்கு ஏற்ப அல்லது அரசு நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.03, பழைய பட்டணம் பாதையில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 15.00 |
| 2 | வார்டு எண்.04, செங்கேணியம்மன் கோயில் வடக்கு தெரு மண் சாலையினை பேவர் பிளாக் சாலையாக அமைத்தல் | 3.50 |
| 3 | வார்டு எண்.08, மாரியம்மன் கோயில் தெருவில் புதியதாக சிமெண்ட் சாலை அமைத்தல் | 10.00 |
| 4 | வார்டு எண்.20, அணைக்குடியார் தெரு முதல் ஹாஜி உசேன் தெரு வரை புதியதாக வடிகால் அமைத்தல் | 20.00 |
| 5 | வார்டு எண்.19, தைக்கால் தெரு பகுதியில் புதியதாக வடிகால் மற்றும் கவர் சிலாப் அமைத்தல் | 2.50 |
| 6 | வார்டு எண்.07, சுதாகர் பீச் நகர் 3, 4 மற்றும் 5வது குறுக்கு தெருவில் புதியதாக மழைநீர் வடிகால் கூடிய சாலை அமைத்தல் | 11.00 |
| 7 | வார்டு எண்.07, சுதாகர் பீச் நகர் 1 மற்றும் 2வது குறுக்கு தெருவில் புதியதாக மழைநீர் வடிகால் கூடிய சாலை அமைத்தல் | 19.50 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 926/2025/இ1)

**தீர்மான எண்:1084**

**(அனுமதிக்கப்பட்டது)**

**பொருள் எண்: 02**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27, சோதனைக்குப்பம் பகுதி குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவு நீர் வடிகாலில் செல்லாமல் அப்பகுதியில் தேங்கி நோய் தொற்று ஏற்படும் சூழ்நிலை நிலவுவதால் சோதனைக்குப்பம் பகுதியிலிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளதால் எனவே ரஹமத் நகர் புதியதாக வடிகால் அமைக்க தோராய செலவினம் ரூ.14.00/– இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1512/2025/இ1)

**தீர்மான எண்:1085**

**(அனுமதிக்கப்பட்டது)**

<u>பொருள் எண்: 03</u>

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.09, தந்திராயன்குப்பம் பகுதி குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவு நீர் வடிகாலில் செல்லாமல் அப்பகுதியில் தேங்கி நோய் தொற்று ஏற்படும் சூழ்நிலை நிலவுவதால் தந்திராயன்குப்பம் பகுதியிலிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளதால் புதியதாக தரைதள தொட்டி மற்றும் பைப்லைன் அமைத்து கழிவு நீரினை வெளியேற்ற தோராய செலவினம் ரூ.15.00/– இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1513/2025/இ1)

**தீர்மான எண்:1086**

**(அனுமதிக்கப்பட்டது)**

<u>பொருள் எண்: 04</u>

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15, பர்கத் நகர் 2வது மெயின் ரோடு முதல் தெருவில் சாலை மிகவும் சேதமடைந்து பொது மக்களுக்கு பள்ளி குழந்தைகளுக்கு சாலையில் செல்வதற்கு சிரமமாக உள்ளதால் பர்கத் நகர் 2வது மெயின் ரோடு முதல் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க தோராய செலவினம் ரூ.14.00/– இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1514/2025/இ1)

**தீர்மான எண்:1087**

**(அனுமதிக்கப்பட்டது)**

<u>பொருள் எண்: 05</u>

எதிர்வரும் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கால்வாய் முட்புதர்கள் அடர்ந்துள்ளதால் மழைநீர் வெளியேற வழிவகை இல்லாமல் உள்ளதால் காளியம்மன் கோயில் பகுதி சர்வே எண்.90ல் உள்ள கால்வாய் தூர்வாரும் பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.60,000/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 773/2025/இ1)

**தீர்மான எண்:1088**

**(அனுமதிக்கப்பட்டது)**

**ஆணையாளர்**

**கோட்டக்குப்பம் நகராட்சி**